TAMIL MURASU, WEDNESDAY, 10 FEBRUARY 2021, PAGE 4

# என்டியு தலைவர் பதவியில் இருந்து ஓய்வுபெறும் திரு கோ பூன் ஹுவீ

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழக (என்டியு) அறங்காவலர் சபைத் தலைவர் பதவியில் இருந்து திரு கோ பூன் ஹுவீ மார்ச் 31ஆம் தேதி ஓய்வுபெறுகிறார். என்டியு இந்தத் தகவலை நேற்று தெரிவித்தது.





திரு கோ பூன் ஹுவீ, திருவாட்டி கோ சுவீ சென். **படங்கள்: என்டியு**

திரு கோ கடந்த 28 ஆண்டுகளாக இப்பதவியை வகித்தார். தேசிய கலைகள் மன்றத் தலைவர் திருவாட்டி கோ சுவீ சென் புதிய என்டியு தலைவராகப் பதவி வகிப்பார். மனிதவள நிபுணர் கழகம், ‘குளோபல் காம்பெக்ட் நெட்வொர்க் சிங்கப்பூர்’ ஆகிய அமைப்புகளின் தலைவராகவும் திருவாட்டி கோ உள்ளார்.

என்டியு தலைவராக திரு கோ பதவியில் இருந்த காலத்தில் பல்வேறு மைல்கற்கள் எட்டப்பட்டன. 2010ஆம் ஆண்டில் லீ கோங் சியென் மருத்துவப் பள்ளி அமைக்கப்பட்டது, அனைத்துலகப் பல்கலைக்கழகத் தரநிலையில் என்டியு எழுச்சி அடைந்திருப்பது உள்ளிட்டவை அவை.